## பிரயாணத்திலிருந்து திரும்பி வந்தபின் ஓதவேண்டிய துஆ

ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒரு போரிலிருந்தோ அல்லது ஹஜ் அல்லது உம்ராவிலிருந்தோ திரும்பி வரும் நிலையில் பாதையில் உயரமான இடத்தைக் கடக்கும்போது மூன்று முறை اللهُ أَكْبَرُ என்று சொல்லி இந்த துஆவை ஓதுவார்கள்:

لاَ إِله إِلَّا اللهُ وحْده لاَ شرِيكَ لَه، لَه المُلْكَ ولَه اَلحَمْد، وَهُوَ عَلَى كُلِّ شَيءٍ قَدِيْرٌ. آيِبُوْنَ تَائِبُونَ عَابِدُوْنَ سَاجِدُوْنَ لِرَبِّنَا حَامِدُوْنَ، صَدَقَ اللهُ وَعْدَهُ، ونَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ.

*பொருள்: அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு யாரும் இணையில்லை, ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது, புகழ் அனைத்தும் அவனுக்கே. அவன் எல்லாவற்றின்மீதும் வல்லமைபடைத்தவனாக இருக்கின்றான். நாங்கள் திரும்பக்கூடியவர்களாக இருக்கின்றோம், பாவமன்னிப்புக் கோருபவர்களாகவும், அவனை வணங்குபவர்களாகவும் சிரம் பணிபவர்களாகவும் இருக்கின்றோம். அல்லாஹ் அவனுடைய வாக்கை உண்மையாக்கிவிட்டான். அவனுடைய அடியானுக்கு உதவி புரிந்துவிட்டான் மற்றும் கூட்டம் கூட்டமான படைகளையும் அவன் தனியாகவே தோல்வியடையவும் செய்துவிட்டான்.* (புக்ஹாரி).

ஹஜ்ரத் ஜாபிர் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்களும் நபித்தோழர்களான நாங்களும் பாதைகளில் உயரத்தை நோக்கிச் செல்லும்போது اللهُ أَكْبَرُ என்றும் கீழிறங்கிச் செல்லும்போது سُبْحَانَ الله என்றும் கூறுவது வழக்கமாகும். (புக்ஹாரி).

* * *

www.uzairfalahi.com